கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண் **114/2024**

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 முத்துகிருஷ்ணன் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 26.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக 2013 லிருந்து பணிபுரிந்து வருகிறேன். எனது மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.35000/– ஆகும். தற்போது எங்கு வேலை செய்கிறேன் என்றால் மணப்பாறையில் வேலை செய்கிறேன். எனக்கு எங்கு பணி இருக்கும் என்றால் தமிழ்நாடு முழுவதும் எங்கு வேண்டுமானாலும் இருக்கும். தாவா சொத்து யார் பெயரில் ஆதியில் இருந்தது என்றால் எனது பாட்டா முத்தவன்னான் பெயரில் இருந்தது. மேற்படி எனது பாட்டனார் பெயரில் சொத்து இருந்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது பாட்டா பெயரில் பட்டா இல்லை. எனது தந்தை பெயரில் தற்காலிக பட்டா உள்ளது. எனது பாட்டாவின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. எனது பாட்டாவின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது. எனது தந்தைக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தறிகாலிக பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டாவின் எண் தெரியுமா என்றால் பட்டா எண்.413 ஆகும். மேற்படி தறிகாலிக பட்டா எந்த துறையினரால் எனது தந்தைக்கு வழங்கப்பட்டது என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவத்திலிருந்து கொடுக்கப்பட்டது. எந்த வருடம் மேற்படி தற்காலிக பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி தற்காலிக பட்டா எவ்வளவு நிலத்திற்கு வழங்கப்பட்டது என்றால் சுமார் 3 சென்டிற்கு வழங்கப்பட்டது.

3. மேற்படி பட்டா நிலத்தில் தற்போது என்ன உள்ளது என்றால் மண் சுவர் வைத்த ஓட்டு வீடு உள்ளது. அதற்கான வாசல் வடக்கு பார்த்து உள்ளது. எனது

தந்தை தற்போது உயிருடன் இல்லை. அவர் இறந்தார் என்றால் கடந்த 2006 ம் வருடம் இறந்தார். எனது தந்தையின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தையின் இறப்பு சான்றிதழை எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் தேதி நியாபகம் இல்லை. ஆனால் வாங்கியுள்ளேன். எனது தந்தையின் வாரிசு சான்றிதழை எந்த தேதியில் எங்கு பெறப்பட்டது என்றால் தேதி நியாபகம் இல்லை. வட்டாட்சியர் அலுவலகத்தில் வாங்கினேன்.

4. எனது தந்தையின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ள கூறியுள்ள நிலையில் அதில் வாரிசுகளாக யார் யார் உள்ளனர் என்றால் மருதையாயி, முத்துகிருஷ்ணன், பழனிமுத்து ஆகியோர். மேற்படி நபர்களில் மருதையாயி எனது தாயார். முத்தவர் நான். வாதி பழனிமுத்து எனது உடன் பிறந்த சகோதரர். மேற்படி பட்டா நிலத்தில் உள்ள ஓட்டு வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. எந்த வருடம் மேற்படி மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் 2006 ல் பெறப்பட்டது. 2006 ல் எனது பெயரில் மின் இணைப்பு பெறப்பட்டதற்கான தமிழ்நாடு மின்வாரியத்தால் வழங்கப்பட்ட ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5. எனது தந்தையின் இறப்பிற்கு பிறது பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. வாதி, எனது தாயார் மற்றும் எனது பெயரில் கூட்டு பட்டா எண்.413 பெறப்பட்டதாகும். மேற்படி கூட்டு பட்டாவில் உள்ள நிலத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கூட்டு பட்டா எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் சுமார் 3 வருடங்கள் இருக்கும். மேற்படி கூட்டு பட்டாவின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கூட்டு பட்டாவின் அசலை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில், என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ. 2 ஆவணம் சான்றிட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஓட்டு வீட்டின் வடபுறம் யார் வீடு உள்ளது என்றால் முத்தரசன் செட்டியார் வீடு உள்ளது. கீழ்புறம் கருப்பன் வீடு உள்ளது.

6. மேற்படி கருப்பன் பெயர் கருப்பன் என்கிற கருப்பசாமியா என்றால் இல்லை. தென்புறம் பொன்னு இரவியின் தோட்டம் உள்ளது. மேற்கே யார் வீடு உள்ளது கலைசெல்வியின் வீடு உள்ளது. கலைச்செல்வியின் வீட்டின் வடபுறம் கருப்பசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலுக்கு

கீழ்புறம் தான் ஆஸ்பெஸ்ட்டாஸ் கொட்டகை போட்டு வசித்து வருகிறேன் என்றால் வடபுறம் வசித்து வருகிறேன். எனது தந்தை இறந்த பிறகு 3ல் 1 பாகமாக முறைப்படி நில அளவையர் வைத்து பிரித்து கொண்டோமா என்றால் வாய்க்காரராக பிரித்து கொண்டோம். மேற்படி பாகப்பிரிவினையை நானும், எனது தாயாரும், வாதியும் தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் செய்து பதிவு செய்துள்ளோமா என்றால் இல்லை.

7. மேற்படி தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்றும், அது வாதிக்கும், எனக்கும், எனது தாயாருக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி 05.04.2024ம் தேதி அவரது பாகத்தை பிரித்து கொடுக்குமாறு என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. பொதுவாக கூட்டு குடும்ப சொத்தை தந்தை இறந்துவிட்டால் பாகப்பிரிவினை செய்யும் உரிமை உள்ளதா என்றால் எங்களின் ஊர் முறைப்படி பிரித்து கொண்டோம். பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் படி பாகம் பிரிக்கவில்லை என்றால் சரிதான். ஓட்டுவில்லை வீட்டிற்கு எனது தந்தையின் இறப்பிற்கு பிறகு யார் பெயரில் வீட்டு வரி இரசீது கட்டி வருகிறோம் என்றால் நான் குடியிருக்கும் வீட்டிற்கு எனது பெயரில் கட்டி வருகிறேன்.

8. மேற்படி வீட்டு வரி இரசீது பாகப்பிரிவினைக்கு முன்பிருந்தே எனது பெயரில் தான் கட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. வாய்க்காரராக பாகப்பிரிவினை செய்த பின்பு தான் எனது பெயரில் இரசீது கட்டி வருகிறேன். வாய்க்காரராக பாகப்பிரிவினை செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் பாகம் பிரிந்த படி தனிப்பட்டா பெற்றுள்ளோமா என்றால் கூட்டு பட்டாவாக தான் உள்ளது. முறையாக சட்டப்படி பாகப்பிரிவினை ஏற்பட்ட பின்பு தான் தனிப்பட்டா பெற முடியும் என்றால் சரியல்ல. மேற்படி ஓட்டு வீட்டிற்கு முதலில் யார் பெயரில் மின் இணைப்பு ஏற்பட்டது என்றால் எனது பெயரில் தான் ஏற்பட்டது. பொதுவாக ஒரு மின் இணைப்பு வாங்க வேண்டும் என்றால் யார் பெயரில் பட்டா உள்ளதோ அவரின் பெயரில் தான் மின் இணைப்பு வழங்குவது வழக்கம் என்பது தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது.

9. 1ம் பிரதிவாதியான எனது தாயாருக்கு மட்டும் கூட்டு குடும்ப சொத்துக்களை தனியாக பாகப்பிரிவினை செய்து ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. இவ்வழக்கின் வாதிக்கு கூட்டு குடும்ப சொத்துக்களை தனியாக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் வாயிலாக பாகப்பிரிவினை செய்து ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளோமா என்றால்

இல்லை. நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து பாகப்பிரிவினை ஏற்படுத்தாமல் எனது தாயாரை என் கைவசம் வைத்து கொண்டு, வாதிக்கு பாகம் கொடுக்காமல், 1ம் பிரதிவாதியின் பாகத்தையும் சேர்த்து 3ம் பிரதிவாதியான எனது மனைவியின் பெயரில் சட்டத்திற்கு புறம்பாக பி.சா.ஆ.3 கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

10. 1ம் பிரதிவாதியான தாயார் இறப்பிற்கு அவருக்கு பாத்தியப்பட்ட பங்கை நானும், வாதியும் வாரிசுரிமை படி சமமாக பிரித்து கொள்ள உரிமை உள்ளது என்றால் சரிதான். ஆனால், 3ம் பிரதிவாதியாகிய எனது மனைவிக்கு எவ்வித பங்கும் கிடைக்காது என்றால் சரியல்ல. என்னிடம் பி.சா.ஆ.3 ஆவணத்தில் வீடு கட்டும் காலி மனை நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வீடு இருந்ததாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.3 நானும், எனது தாயாரும் சேர்ந்து 3ம் பிரதிவாதியாகிய எனது மனைவிக்கு கிரையமாக ஏற்படுத்தி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வாதி பி.சா.ஆ.3 ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் ஆவணத்தை பார்த்தேன் கையொப்பம் இல்லை.

11. பி.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட பின்பு தான் எனது மனைவி பெயரில் பி.சா.ஆ.4 தனிப்பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தையின் பெயரில் இருந்த பட்டா நிலத்தின் பட்டா எண்ணை தான் பி.சா.ஆ.4 பட்டாவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.4 பட்டா எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் தேதி நியாபகம் இல்லை. சட்டப்படி, முறைப்படி எனது தந்தை பெயரில் ஏற்பட்ட தாவா சொத்து வாரிசுரிமை படி 3ல் 1 பங்கு பாகத்தை கிரைய ஆவணமாக ஏற்படுத்தி கொடுத்து அதன் பின்னிட்டு தான் எனது சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் பாராதீனம் செய்ய முடியும் என்றும், வாதிக்கு சட்டப்படி 3ல் 1 பாகம் பிரித்து கொடுக்காமல் சட்டத்திற்கு விரோதமாக வாதியை மோசடி செய்யும் வகையில் 1ம் பிரதிவாதியை தன்வசம் படுத்தி அவரது பாகத்தையும் சேர்த்து 3ம் பிரதிவாதியான எனது மனைவிக்கு எனது பாகத்தையும் சேர்த்து சட்ட விரோதமாக 2023ல் ஆவண எண்.2131/2023யை பி.சா.ஆ.3 கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளது சட்டப்படி வாதியை கட்டுப்படுத்தாது என்றும், பி.சா.ஆ.3 சட்டத்திற்கு விரோதமாக எற்பட்ட ஆவணம் என்றும், அதை இந்நீதிமன்றம் இரத்து செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

12. சட்டவிரோதமாக எனது பெயரில் வீட்டு வரி இரசீது, மின் இணைப்பு இரசீது பாகப் பிரிக்காமல் போலியாக பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால சரியல்ல. முறைப்படி, சட்டப்படி வாதிக்கு சேர வேண்டி 3ல் 1 பாகத்தை நீதிமன்றம் இவ்வழக்கில் தாவாப்படி தீர்ப்பளித்து பாகப்பிரிவினை செய்து கொடுப்பது சட்டப்படி நியாயம் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இரத்து செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனவே, எனது கட்சி சட்டப்படி செல்லாது என்றும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya

**Additional District Munsif,**

**Kulithalai.**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 48/2024

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 முகம்மது ஹனீஃபா திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 26.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **முகம்மது ஹனீஃ பா** | கிராமம் | |
| த/பெ | சாகுல் ஹமீது | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | **42** |

**பி.வ.சா.1– – முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் 6 ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக் கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேற்கொண்டு ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண் 92/2024

வாதி தரப்பு சாட்சி –1 யாசின் மௌலானா திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 26.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>4 முதல் 7 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். யார் யாருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரஹமத் நிஷா, பாத்திமா, சதாமுசைன், வருவாய் துறையினர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தந்தையின் இரண்டாம் மனைவிக்கு பிறந்த குழந்தைகள் எங்களை விட்டு எங்களது தந்தையின் வாரிசு சான்றதழை பெற்றுவிட்டதால், அதனை இரத்து செய்து எங்களையும்இணைத்து வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4 முதல் 6 பிரதிவாதிகளான அரசு அதிகாரிகள் எங்களிடம் எதுவும் பிரச்சனை செய்தார்களா என்றால் இல்லை.

2. இவ்வழக்கில் என்னென்ன ஆவணங்களை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாயாரின் திருமண சான்றிதழ், எனது தந்தையின் 2 ம் மனைவியின் திருமண சான்றிதழ், என்னை விட்டு பெறப்பட்ட வாரிசு சான்றிதழ், வருவாய் துறையினரிடம் அளித்த மனு அகியவற்றை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரச்சனை சம்மந்தமாக புகார் எதுவும் அளித்தேனா என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்தேன். மாவட்ட ஆட்சியர் எனது புகாரை வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி, பின்பு வருவாய் கோட்டாட்சியர் என்னை நீதிமன்றம் அணுகி பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறிவிட்டார். எனது தந்தை எந்த ஊரில் இறந்தார் என்றால் கடவூர் வட்டம், மைலம்பட்டி ஊரில் இறந்தார். இவ்வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**